பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
**Chief Secretary's Secretariat, Northern Provincial Council**

**A 9,** வீதி, கைதடி.
**A 9,** පාර, කෛතඩිය
**A 9, Road, Kaithadi**

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com

My No.: NP/02/01/NPSO/2025 Date: 22.03.2025

செயலாளர்கள்
பிரதிப் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
வடக்கு மாகாணம்

**வடக்கு மாகாண சபையின் நிலையியற் கட்டளை - இலக்கம் NP/SO/ 2025/01**
**அரசாங்க வாகனங்களின் பாவனை**

**விடயம் 1: ஒதுக்கு வாகனம்**

- அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 22/99 மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய ஒதுக்கு வாகனங்களுக்கு உரித்துள்ள உத்தியோகத்தர்கள் அலுவலக வாகனங்களை பிரதம செயலாளரின் அனுமதியைப் பெற்று ஒதுக்கு வாகனங்களாக பாவித்தல் வேண்டும்.

- முறையாக பிரதம செயலாளரின் அனுமதி பெறப்பட்ட வாகனங்களே இணைப்புச் செய்யப்பட்ட வாகனங்களாக கருதப்படும்.

**விடயம் 2: அரசாங்க வாகனங்களுக்கு பதிலாக மாதாந்தபடியை பெறும் அலுவலர்கள் அரசாங்க வாகனத்தினை பயன்படுத்துதல்**

- உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு பதிலாக மாதாந்த பிரியாணப் படி வழங்குதல் எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 05/2016 மற்றும் அதன் திருத்தங்களின் பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

- மேற்படி சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு பதிலாக மாதாந்த படியை பெற்றுக்கொள்ளும் அலுவலர் ஒருவர் அரச வாகனம் ஒன்றினை தனிப்பட்ட தேவைக்கு (குடும்ப உறுப்பினர்களின் தேவை உட்பட) அல்லது கடமையின் நிமித்தமோ அல்லது பொதுவிழாக்கள் என்பவற்றிற்கு பயன்படுத்துவதற்கு உரித்தாகமாட்டார்.

**விடயம் 3: அரசாங்க வாகனத்தினை சொந்த தேவைக்கு பயன்படுத்துதல்**

- அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 22/99 மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய ஒதுக்கு வாகனத்தை தனிப்பட்ட பிரயாண நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு உரித்துடைய அலுவலர் ஒருவர் பிரதம செயலாளர் அவர்களால் குறித்தொதுக்கப்பட்ட வாகனத்தினை மாத்திரமே தனது தனிப்பட்ட பிரயாண நோக்கத்திற்கு பயன்படுத்த உரித்துடையவராவார்

- அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 22/99 மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய ஒதுக்கு வாகனத்தை தனிப்பட்ட பிரயாண நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு உரித்தற்ற அலுவலர் எவரேனும் தனது தனிப்பட்ட தேவைக்கு அலுவலக வாகனத்தினை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படலாகாது.

**விடயம் 4: ஒதுக்கு வாகனத்திற்கு மேலதிகமாக அலுவலக குழும/குழு வாகனத்தினை பயன்படுத்துதல்**

- அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 22/99 மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய ஒதுக்கு வாகனத்திற்கு உரித்துடைய அலுவலர் ஒருவருக்கு பிரதம செயலாளர் அவர்களால் குறித்தொதுக்கப்பட்ட வாகனத்திற்கு மேலதிகமாக அலுவலகத்தின் குழும/குழு வாகனங்களை பயன்படுத்தலாகாது

**மேற்படி விடயங்கள் தொடர்பான அறிவுறுத்தலுக்கு புறம்பாக அரசாங்க வாகனத்தை பயன்படுத்தும் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது அதற்கு அனுமதி வழங்கும் உத்தியோகத்தர் ஒருவர் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்**

இ.இளங்கோவன்
பிரதம செயலாளர்

இ.இளங்கோவன்
பிரதம செயலாளர்
வட மாகாணம்

பிரதி பிரதம செயலாளர்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම්
DEPUTY CHIEF SECRETARY

நிர்வாகம் පරිපාලන ADMINISTRATION Tel : 021 223 2351(Dir) : 021 223 2350(Gen) Fax : 021 222 0950 e-mail : ppas.np@gmail.com

நிதி මූල්‍ය FINANCE Tel : 021 222 0850 (Dir) : 021 222 0854 (Gen) Fax : 021 222 0853 e-mail : nptreasury@gmail.com

திட்டமிடல் සැලසුම්කරණ PLANNING Tel : 021 223 0355 (Dir) : 021 223 0451 (Gen) Fax : 021 223 0354 e-mail : npplan@sltnet.lk

ஆளணிப் பயிற்சி විධිමත් හා සුහුඹු PERSONNEL TRAINING Tel : 021 739 1250 (Dir) : 021 739 1254 (Gen) Fax : 021 739 1257 e-mail : npmdti@gmail.com

பிரதம உள்ளக கணக்காய்வாளர் ප්‍රධාන අභ්‍යන්තර විගණක CHIEF INTERNAL AUDITOR Tel : 021 222 0796 (Dir) : 021 222 9528 (Gen) Fax : 021 222 0796 e-mail : npcaudit@yahoo.com